16th March 1959]

Coir industry

* 831-G *Q.*—SRI T. S. RAMASWAMY PILLAI (on behalf of SRI K. SATTANATHA KARAYALAR) : Will the Hon. the Minister for Industries be pleased to state the number of persons engaged in Coir Industry?

THE HON. SRI R. VENKATARAMAN : About 11,000 persons.

SRI R. SRINIVASA IYER : Is there any scheme of this Government to develop the coir industry which is in a very backward way at present?

THE HON. SRI R. VENKATARAMAN : We propose to have four or five co-operative coir factories in Kanyakumari district. The training centre in Tanjore district at Pushpavanam will be converted into an industrial co-operative. Similarly, the training centre in Coimbatore district will also be converted into an industrial co-operative society.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : இந்தக் கயிறு தொழில் எந்தெந்த ஜில்லாக்களில் கூட்டுறவு முறையில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

THE HON. SRI R. VENKATARAMAN : நம் ராஜ்யத்தில் கயிறுத் தொழில் கிடையாது. இதுவரை அதிகமாக நடந்துவந்த பகுதிகளெல்லாம் கேரளாவிற்குச் சென்றுவிட்டது. ஆகவே கன்யாகுமரி ஜில்லாவில் கூட்டுறவு முறையில் இத்தொழிலை ஆரம்பிக்கப்போகிறோம்.

SRI A. VEDARATHNAM : கேரளம் பிரிந்தபிறகு அங்கிருந்த பெரிய பாக்டரி கேரளத்திற்கு சென்று விட்டது. அதேமாதிரி பெரிய பாக்டரியை நம் ராஜ்யத்தில் அமைப்பதற்கு உத்தேசம் உண்டா ?

இங்குள்ள கூட்டுறவு சங்கம் மத்திய கயிறு போர்டு சம்பந்தப்பட்டவரை இங்கு உற்பத்தி செய்கின்ற பொருளை அவர்கள் மூலம் உற்பத்தி செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா ? இல்லை என்றால் சர்க்கார் இதைப் பரிசீலனை செய்யுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இப்பொழுது நம் ராஜ்யத்தில் கூட்டுறவு முறையில் கயிறு உற்பத்தி ஆரம்பிக்க இருக்கிறது. பின்னால் அந்தப் பிரச்னை எழுகின்றபோது அது கவனிக்கப்படும்.

SRI M. P. PERIASAMI : இந்தக் கயிறு விவசாயத்திற்கு முக்கியமான பொருள் என்பதை குறித்து அரசாங்கம் ஒவ்வொரு ஜில்லாவிலும் கயிறு உற்பத்தி செய்யும் தொழிலை ஏற்பாடு செய்வார்களா ?

THE HON SRI R. VENKATARAMAN : ஒவ்வொரு ஜில்லாவிலும் ஆரம்பிப்பதற்கு அங்கு உப்புத் தண்ணீர் மட்டும் அல்லாமல் நல்ல தண்ணீரும் வேண்டும். மேற்கூறிய வசதியை செய்தவற்கு எல்லா உதவியையும் செய்யும்.

SRI R. SRINIVASA IYER : Sir, want of trained hands is felt very much in this State for the development of industries. There has been a proposal that the Government should start production-*cum*-training centres. Will the Government consider the feasibility of opening such centres, wherever it is possible to do so?

THE HON. SRI R. VENKATARAMAN : We propose to have a Coir School at Ethamozhi in the Kanyakumari district. Then, the Government have started these training-*cum*-production centres

at Pushpavanam in the Tanjore district and at Chinnapalayam in the Coimbatore district. I think, these are the places where the training as well as production are going on.

Ryots affected by the Neyveli Project

* 831 *Q.*—SRI M. P. SUBRAMANIAM (on behalf of SRI A. GOVINDASAMY): கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) நெய்வேலி திட்டத்தினால் பாதிக்கப்பட்ட புதுக்கரைப்பேட்டை விவசாயிகளுக்கு குடியிருப்புக்கு ஒரு குடும்பத்திற்கு எத்தனை செண்ட் நிலம் ஒதுக்கப்பட்டிருக்கிறது ?

(ஆ) விவசாயித்திற்கு ஒவ்வொரு குடும்பத்திற்கும் நிலம் ஒதுக்கப்பட்டிருக்கிறதா ?

(இ) அதற்காக நீர்ப்பாசன வசதிகள் செய்யப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) The people displaced from Kooraipettai village, have been rehabilitated by the Neyveli Lignite Corporation in "New Kooraipettai" village and allotted—as will be done in the other rehabilitation colonies also—house sites, free of cost, at the rate of 10 cents to each of those whose pukka houses have been acquired and 5 cents to each of those whose cutcha houses have been acquired.

(*b*) Yes, Sir. Land equal in extent to the lands acquired from a ryot subject to a maximum of 2 acres have been allotted for agricultural purposes.

(*c*) No, Sir. The lands allotted for agricultural purpose are rain-fed dry forest lands and irrigation facilities cannot be extended to these lands.

SRI M. P. SUBRAMANIAM : இந்த நெய்வேலி திட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகட்டுவதற்கு அவர்களுக்கு கொடுக்கப்படும் நிலத்தை சீர்த்திருத்தம் செய்வதற்கு அரசாங்கம் ஏதாவது திட்டம் வகுத்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன் ?

THE HON. SRI R. VENKATARAMAN : அவர்களுக்கு சட்டபடி காம்பன்சேஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைத்தவிர கார்பொரேஷனில் ஏக்கருக்கு 50 ரூபாய் உதவி கிடைக்கிறது.

SRI T. S. RAMASWAMY PILLAI : சமீபத்தில் உயர்நீதி மன்றம் அவர்கள் கொடுக்கக் கூடிய நஷ்டயீடு சட்டப்படி செல்லாது என்று சொல்லிவிட்டார்கள். அப்படியானால் அரசாங்கம் இப்பொழுது என்ன கொடுக்கப்போகிறது. இதைப் பற்றி அரசாங்கம் ஆலோசித்ததா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இதைப்பற்றி ஹைக் கோர்ட்டு 1947 வருஷத்து மதிப்பு செய்த பிரகாரம்தான் நஷ்ட ஈடு கொடுக்கவேண்டும் என்று தீர்ப்பில் சொல்லியிருக்கிறார்கள். அது சர்க்காரின் பரிசீலனையில் இருக்கிறது இன்னும் ஜட்ஜுமெண்ட் காபி வரவில்லை. வந்த பிறகு என்ன உதவி செய்ய வேண்டும் என்பதை ஆராயவேண்டும். கனம் அங்கத்தினர் சுப்பிரமணியம் கேள்வி சம்பந்தப்பட்டவரையில் :

The Corporation is willing to pay Rs. 50 per acre of property acquired over and above the cost of compensation payable to the property.